Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (6-11-65) இதழ் 267

விசுவாவசு ஐப்பசி 21 றஜபு பிறை 11 சனிக்கிழமை

தமிழரசுக் கட்சித் தலைவராக

## டாக்டர் நாகநாதன் ஏகமனதாகத் தெரிவு

யாழ்ப்பாணம், வெள்ளி நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் அடுத்த மகாநாடு முதல் கட்சியின் தலைவர் பதவிக்கு டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனின் பெயர் மாத்திரமே பிரேரிக்கப்பட்டிருந்தது.

டாக்டர் நாகநாதன் முதன் முதலாக 1952-ம் ஆண்டு யாழ்ப்பாணத் தொகுதியில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை எதிர்த்துப்போட்டியிட்டுத்தோல்வியடைந்தபோதிலும் மீண்டும் 1956-ம் ஆண்டிலும் யாழ்ப்பாணத் தொகுதியில் திரு. பொன்னம்பலத்துடன் போட்டியிட்டார்இத்தேர்தலிலும் அவர் வெற்றிபெறும் வாய்ப்பையிழந்துவிட்டார். தமிழரசுக்கட்சியை வளர்ப்பதில் முழுமூச்சாக அவர் உழைத்துவந்தார்.



யாழ்ப்பாணத் தொகுதி இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது 1960-ம் ஆண்டு மார்ச், ஜூலை தேர்தல்களில் நல்லூர் தொகுதியில்

(6-ம் பக்கம் பார்க்க)

இந்திய வம்சாவழியினருக்கென

# "தனிவாக்காளர் ஜாபிதா இல்லை"

## பார்லிமெண்டில் ஜே. ஆர். அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

"இந்த நாட்டிலுள்ள இந்திய வம்சாவழியினருக்கெனத் தனியானதொரு வாக்காளர் ஜாபிதா தயாரிக்கும் உத்தேசம் அரசாங்கத்துக்கு இல்லை. அவர்களின் பெயர்களை தனி ஜாபிதாவில் வைக்கவும் நாங்கள் உத்தேசிக்கவில்லை. வருங்காலத்தைப்பற்றி இப்பொழுது சொல்லமுடியாது. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் அமுலாக்கப்படும்பொழுது இவைபற்றி எல்லாம் பரிசீலனை செய்வோம்."

இவ்வாறு ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பார்லிமெண்ட் தேர்தல் சட்டத் திருத்த மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

தேர்தல் ஜாபிதாவில் வாக்காளர்களாகப் பதிவு செய்யத் தகுதியற்றவர்களின் பெயர்கள் வாக்காளர் ஜாபிதாவில் சேர்க்கப்படமாட்டா. சரியான முறையில் தேர்தல் ஜாபிதாக்களைத் தயாரித்துவைக்கும்பொருட்டு தோட்ட சுப்ரின்டென்டுகளுக்கு தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று திரு. ஜயவர்த்தன மேலும் கூறினர்.

நியமன எம். பி. திரு. தொண்டமான் பேசுகையில், இந்த நாட்டின் உண்மையான பிரஜைகளை வாக்காளர் ஜாபிதாவில் பதியாமல் வைத்திருப்பது பெரும் அநீதியென்ருர். தகுதியுடையவர்களுக்கும் வாக்குரிமையளிக்கப்படாமல் தடுப்பதற்குப்பலர் பெருந்தொகையான பணம் செலவுசெய்திருக்கின்றனரென்றும் தோட்டப் பகுதிகளிலுள்ள தொழிலாளர்களுக்கு அவர்களுடைய இந்த ஜனநாயகஉரிமையை மறுப்பதற்கு முன்னைய அரசாங்கம் சாத்தியமானதெல்லாவற்றையும் செய்திருக்கிறதென்றும் கூறினர்.

## "தலைமன்னர் - தனுஷ்கோடி போக்குவரத்து சாத்தியமில்லை"

### டில்லி ராஜ்யசபையில் மந்திரி பதில்

புதுடில்லி, நவ. 5

தலைமன்னருக்கும் தனுஷ்கோடிக்குமிடையேயான ரயில், கப்பல் தொடர்பு சேவை இப்போது சாத்தியமல்லவென ரயில்வே மந்திரி டாக்டர் ராம் சுபாசிங் கூறினர்.

ராஜ்யசபையில் டி. வி. ஆனந்தனின் கேள்விக்குப் பதிலளிக்கையில் மந்திரி இவ்வாறு கூறினர்.

முன்பு உபயோகிக்கப்பட்ட இரு பழைய நீராவிப் படகுகளும், தனுஷ்கோடி தலைமன்னர் இறங்கு துறைகளும் புயல், கடல் கொந்தளிப்பினுல் படுசேதமடைந்திருப்பதே இதற்குக் காரணம் என டாக்டர் சிங் கூறினர்.

பாம்பனுக்கும் தனுஷ்கோடிக்குமிடையேயான ரயில் பாதையும் புயலினுல் படுசேதமடைந்தது. எனவே போக்குவரத்து அங்கு கைவிடப்பட்டது. இந்த ரயில் பாதையைத் தாங்கி நின்ற ஒரு பகுதி நிலம் இப்போது ஏரியாகிவிட்டது' என்றுர் மந்திரி.

கடந்த ஜூன் மாதம் 20ம் திகதி முதல் தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே வாரம் இரு முறை பிரயாணிகள்-சாமான்கள் அடங்கிய கப்பல் சேவை இந்திய கப்பல் கார்ப்பரேஷனுல் நடத்தப்படுகிறதென்றும் டாக்டர் ராம் சுபாசிங் குறிப்பிட்டார். பி. டி. ஐ.

## ரஷ்ய எச்சரிக்கைக்கு அல்ஜீரியா பணிந்தது

### ஆசிய- ஆபிரிக்க மகாநாடு குறித்து சில தகவல்கள்

அல்ஜீயர்ஸ், நவ. 5

சோவியத் அரசாங்கத்தின் கடைசி நிமிட எச்சரிக்கை காரணமாகவே, ரஷ்யாவை ஆசிய ஆபிரிக்க உச்சி மகாநாட்டுக்கு அழைக்க அல்ஜீரியா விரும்பியது எனக் கூறப்படுகிறது.

ரஷ்யாவை மகாநாட்டுக்குஅழைக்கவேண்டுமென்ற இந்தியாவின் தீவிர முயற்சியை அதற்கு முன் அல்ஜீரிய வெளிநாட்டு மந்திரி திரு. அப்துல் பௌட்டெபிலிகா எதிர்த்திருந்தார்.

சோவியத் ஸ்தானிகர் அல்ஜீரிய பிரதமர் பொமீதியனைக் கண்டு எச்சரித்த பின்பே அல்ஜீரியா தன் போக்கை மாற்றிக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

ஆசிய - ஆபிரிக்கஉச்சி மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது குறித்து பாகிஸ்தான் திருப்தி தெரிவித்திருக்கிறது.

பி. டி. ஐ. — பி. டி. ஸி.

## "மேற்குநாடுகள் ஆத்மீகதுறையில் ஆண்டிகளாகி வருகின்றன"

### கனேடிய தத்துவஞானி பேச்சு

மொங்கிர், நவ. 5

"மேற்குநாடுகள்ஒருபுறம் விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும், விரைவாக அபிவிருத்தி பெற்று அதிக சக்தியுடன் வளர்ந்துவரும் அதேசமயம் மறுபுறம் அபாயமான, ஆத்மீக நெருக்கடியை நோக்கி வீழ்ச்சியடைந்துகொண்டிருக்கின்கின்றன".

இங்கு நடைபெறும் சர்வதேச யோக மகாநாட்டில் பேசிய கனேடியத் தத்துவஞானி டாக்டர் புருக் ரொபர்ட்ஸன் மேற்கண்டவாறு கூறினர்.

"லோகாயதத் துறையில் சுபிட்சமடைந்திருப்பதாய்த் தோன்றியபோதிலும், ஆத்மீகத் துறையில் மேற்குநாடுகள் ஒட்டாண்டிகளாகிவருகின்றன. மேற்கு நாடுகள் ஏற்கனவே ஒன்றின்மீது ஒன்று அவநம்பிக்கைகொள்ள ஆரம்பித்திருக்கின்றன. அழிவு ஆயுதங்களைப்பெருக்கி மேலும் மேலும் பலம்பெறும் முகமாகஆண்டுதோறும் அவைகள்தங்கள்பட்ஜட்டைஅதிகரித்துவருகின்றன" என்றும் டாக்டர் றுபர்ஸன் கூறினர்.

"இந்தியகலாச்சாரம் உலகிலேயே மிகப்பழைமையானது. உலகத்தின் மிக அழகான கலாச்சாரம் அதுவே. நினைவுக்கெட்டாக் காலத்திலிருந்தே சிக்கலான பிரச்னைகளுக்கும் அமைதித் தீர்வுக்கு அது வழிவகுத்திருக்கிறது" என்றும் அவர் கூறினர்,

பி. டி. ஐ.

## தேசியசுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு.

| | |
|---|---|
| முதலாவது பரிசு | |
| 11 T 0562 | ரூ. 59,950 |
| இரண்டாவது பரிசு | |
| 16 X 0738 | ரூ. 23,980 |
| மூன்ருவது பரிசு | |
| 10 N 0319 | ரூ. 5,995 |

தலா ரூ. 299-75 கொண்ட

(6-ம் பக்கம் பார்க்க)

## இங்குவரும் வானெலிக் கமிஷன்

மாவிட்டபுரம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் வானெலி நிலையம் நிறுவப்படுவது சம்பந்தமாகஆலோசனைகளையும் விசாரணைகளையும் ஆராய்வதற்காக ஒலிபரப்பு, தகவல் விசாரணைக் குழு அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகிறது.

யாழ்ப்பாணம் புதிய அரசாங்க செயலகத்தில் ஒலிபரப்பு தகவல் விசாரணைக் குழுவினர் பொது ஸ்தாபனங்களினதும் சங்கங்களினதும் சாட்சியங்களை நேரில் பெற்றுக் கொள்வர். இம்மாதம் 11-ம் திகதி காலை விசாரணைகள் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடனும் கூடிய ஒலிபரப்பு நிலையமும் ஒலிப்பதிவு நிலையமும் உடன் அவசியம் நிறுவப்படவேண்டுமென எல்லா ஸ்தாபனத்தினதும் சங்கத்தினதும் பிரதிநிதிகளும் வற்புறுத்தவிடுக்கின்றனர் எனத் தெரிகிறது.

## ஞாயிற்றுக்கிழமைக்கு பதில் போயா லீவு

கொழும்பு, வெள்ளி

ஞாயிற்றுக்கிழமைக்குப் பதில் ஒவ்வொரு போயா தினத்தையும் விடுமுறைதினமாகச் செய்யும் மசோதா ஒன்றை உள்நாட்டு மந்திரி டாக்டர் டபிள்யூ. தஹநாயக்கா இன்று பார்லிமெண்டில் சமர்ப்பித்தார்.

## நத்தாருக்கு ரூ. 2லட்சம் பொம்மைகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

இந்தவருடம் நத்தார் தினத்தை முன்னிட்டு ரூபா 194,000 பெறுமதியான பொம்மைகள் இறக்குமதியாகவிருக்கின்றன.

இதன்காரணமாக வெளிநாட்டுப்பொம்மைகள்இலங்கையில் அதிகரித்துவிடாது என்றும் இந்தப் பொம்மைகள் நத்தார்த் தினத்துக்கு முன் இறக்குமதி செய்யப்பட்டு நியாயமான விலையில் விற்பனை செய்யப்படவேண்டும் என்றும் இறக்குமதியாளருக்கு அறிவித்தல் செய்யப்பட்டுள்ளதென்றும் அரசாங்க அதிகாரி ஒருவர்தெரிவித்துள்ளார்.

## நுளம்புத் தொல்லை

மன்னர், வெள்ளி

மன்னர் மாவட்டத்தில் நுளம்புகள் தொல்லை அதிகரித்துள்ளது. மலேரியா தடுப்புப் பகுதியினர் இங்கு இல்லாததால் மன்னர் மாவட்டத்திலும் கிராமப்புறங்களிலும் இந்த நுளம்புகளினுல் 'மலேரியா' பரவக் கூடுமோவென பொதுமக்கள் அஞ்சுவதாக அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஆலயவழிபாட்டின்நோக்கம், மனத்தைப் பாச கரணங்களில் தோயவிடாது பக்தி அன்பு கரணத்தில் தோயவிடுத்து 'அஹிம்சாபரமோ தர்ம' என்னும் உயரிய அறத்தைப் பெறுவிப்பதாகும்.

— திரு. வி. க.


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி மீ 21 உ (6-11-65)


## தமிழாசிரியர் இடமாற்றத்திட்டம்

தமிழாசிரியர்களின் இடமாற்றப் பிரச்னை சம்பந்தமாக தமிழரசுக்கட்சி எம். பி. க்களுக்கும் தமிழ் ஆசிரிய சங்கங்கள் சிலவற்றுக்குமிடையில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் ஆசிரியர் இடமாற்றம் பற்றி ஒரு உடன்பாடு ஏற்பட்டு அத்திட்டம் அரசாங்கத்திடம் சிபார்சு செய்யப்படவிருக்கிறது.

மாணவர்களையும் அவர்களின் கல்வி வளர்ச்சியையும் பாதிக்காத இடமாற்றத் திட்டமெதையும் பெற்றோரும் ஆசிரியர்களும் நிச்சயமாக வரவேற்பர்.

தமிழாசிரியர்களின் இடமாற்றப் பிரச்னை தீராத பிரச்னையாக இருந்துவருகிறது. இதுபெரும் பிரச்னையாக வளர்ந்துள்ளதற்கு அரசியல்தலையீடுகளும் ஆசிரியர்களுக்குள் பல்வேறு சங்கங்கள் இருப்பதுவும் ஒரு காரணமாகக் கூறலாம். தமிழ் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் தென்னிலங்கையில் தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படுவதாகச் செய்திகள் வெளியானபின்னரும் தமிழ்ஆசிரியர்களின் இடமாற்றம் பற்றி ஒரு முடிவு காணப்படாவிட்டால் அது தமிழ் சமூகத்தையே பாதிக்கும். இவ்வகையில் ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்வதற்கு ஒரு இணக்கமான திட்டம் தயாரிக்க முன்வந்தவர்களைப் பாராட்டவேண்டும்.

ஒருபாடசாலையில் ஆசிரியர் ஒருவரைப் புதிதாக நியமிக்கவும் அப்பாடசாலையில் உள்ள ஒரு ஆசிரியரைவேறு ஒரு பாடசாலைக்கு மாற்றவும் அப்பாடசாலையின் தலைமையாசிரியரின் அபிப்பிராயத்துக்கும் இடம்கொடுப்பது நல்லது. இது பாடசாலையின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியம். ஆசிரியர்களை அடிக்கடி இடமாற்றம் செய்வதும் இடைக்காலத்தில் இடமாற்றம்செய்வதும்மாணவர்களின் கல்வியை நிச்சயம் பாதிக்கும்; இடமாற்றம் பெறும் ஆசிரியர்களுக்கும்இதனுல்வீண்சிரமம். ஆசிரியர்களின் சேவைக் காலத்தைக் கணித்தும் அவர்கள் சேவை புரிந்த இடங்களைக் கவனத்தில் கொண்டும் விருப்பு வெறுப்பு இன்றி ஆசிரியர் இடமாற்றத் திட்டத்தை அமுல் செய்தால் இடமாற்றம் ஒரு பிரச்னையாகத் தோன்ருது. ஆசிரியர்களுக்கிடையில் காண்பிக்கப்படும் பேதங்களை நீக்குவதும் இடமாற்றத் திட்டம் வெற்றிபெற உதவியாகும்.

'வடமாகாணத்திலுள்ள மேலதிக ஆசிரியர்களைக் கொண்டு, தென்னிலங்கையிலுள்ள தமிழாசிரிர்களினது காலி இடங்கள் உடனடியாக நிரப்பப்படவேண்டும். அப்படி மாற்றும்போது வெளிமாகாணங்களில் முன்னர் சேவையாற்றியோர் மீண்டும் வெளிமாகாணங்களுக்கு மாற்றப்படாதிருப்பதுடன் தமிழ் ஆசிரியர்கள் அவசியம் அப்பாடசாலைக்கு தேவையென்போரையும் மாற்ருமல் இருக்க வேண்டும்'' என்ற சிபார்சை ஆசிரியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வர் என்பதில் ஐயமில்லை. பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்கள் என்பதில் விசேஷ பயிற்சி பெற்ற ஆசிரியர்களையே குறிப்பாகக் கொள்ளல் வேண்டும். இந்த ஆசிரியர்களின் இடமாற்ற விஷயத்தில் தலைமை ஆசிரியரின்அபிப்பிராயத்தையும் பெற்று அதற்கேற்ற ஒழுங்குகள் செய்த பின்னரே இடமாற்றம் செய்வது நல்லது.

ஆசிரியர் இடமாற்றத் திட்டம் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாதிக்காத வகையில் நிறைவேற்றப்பட்டால் கல்வித்துறையிலுள்ள ஒரு பெரும் பிரச்னை நீங்கும், கல்வியும் வளர்ச்சியடையும்.

## பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம்

தென் இலங்கையில் தெங்குப்பொருள் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளதுபோல், வட இலங்கையில் பனம் பொருள்ஆராய்ச்சி நிலையமொன்று அமைக்கப்படவேண்டுமெனக் கோரும் பிரேரணையை ஜனப்பிரதிநிதிகள்சபையில்கொண்டு வருவதற்குப் பருத்தித்துறை எம். பி. முன்னறிவித்தல் கொடுத்திருக்கிருர். இப்பிரேரணை நிறைவேறி விரைவில் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் செயல்படும் என்று நம்புவோம்.

பனையைக் கற்பகதரு என்று சொல்வதுண்டு. பனையின் ஒவ்வொரு பகுதியும் மனிதனுக்கு உபயோகப்படக்கூடியது. முன்னுளில் பனையைப் பயன்படுத்திய மக்கள் கஷ்டம் கவலையின்றி வாழ்ந்தனர். இன்று விஞ்ஞானம் வளர்ச்சியடைந்திருப்பினும், பனையைப் பயன்படுத்தத் தெரியாது வெளிநாடுகளில் இருந்து வரும் பொருள்களையே நாம் அதிகம் விரும்புகின்ருேம். இதனுல் பல கஷ்டங்களையும் அனுபவிக்க நேரிடுகிறது. தமிழ்நாட்டில் பனையிலிருந்து பலவித பயனடைகின்றனர். பனைநார் கட்டில், கதிரை பின்னவும் பதநீரிலிருந்து சீனி உற்பத்திசெய்யவும் பதநீரைப் பனிக்கட்டி போல் உறையவைத்துப் பயன்படுத்தவும் மற்றும் பலவித பொருள்களையும் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்கின்றனர். யாழ்ப்பாணக்குடா நாட்டிலும் பதநீரிலிருந்து சீனி உற்பத்தி செய்யவும் மற்றும் சில பொருள்களைத் தயாரிக்கவும் தனிப்பட்ட முறையில் சிலர் முன்வந்தனர். எனினும் போதிய உதவியும் ஊக்கமுமில்லாததாலும், தகுந்த ஆராய்ச்சி வசதியில்லாததாலும் இந்த முயற்சி பெரும்பாலும் கைவிடப்பட்டுவிட்டது. வீட்டுப் பாவனைக்கு கிராமப்புற மக்கள் பனம்பொருளைப் பாவித்தாலும் வர்த்தக ரீதியில்இதை முன்னேற்ற முடியாமல் உள்ளது. பனையைச் சரிவரப் பயன்படுத்தி நவீன முறையில் புதிய பல பொருள்களை செய்யவேண்டும். அதன் பொருள்களை உள்நாட்டுத் தேவைக்கு மட்டுமின்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து அந்நிய செலாவணியைச் சம்பாதிக்கவும் பனம் பொருள் ஆராய்ச்சிநிலையம் பெரிதும் உதவும்.

ஆசிரியருக்கு கடிதம்

## ஆசிரியர்கள் இடமாற்றத் திட்டம்

தமிழ்ப்பிள்ளைகளின்ஆரம்பக்கல்வியிற் கவனம் செலுத்தவேண்டிய பொறுப்பு தமிழாசிரியர்களையே சார்ந்தது. மலையகத் தமிழர் மத்தியிலும் பிற்போக்கான இடங்களிலும் போதிய தமிழாசிரியர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஏராளமாக உள்ளனர். ஆசிரியர் பற்ருக்குறைப் பகுதிகளுக்கு ஆசிரியர்கள் அதிகமாக உள்ள பகுதிகளிலிருந்தே செல்லுதல்வேண்டும். அரசினர்பாடசாலைஆசிரியர்கள் இவ்வகையில் சிறப்புப்பணி புரிந்துள்ளனர். எனினும் அநேக ஆண்டுகளாக உற்ருர் உறவினர் மத்தியில் இருந்தகன்றிருந்த அவர்கள் சொந்த இடங்களிலும் சேவைசெய்ய விரும்பும் போது அதை அனுமதிப்பதும், ஏனையோர் அப்பணியை மேற்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுவதும் நியாயமானதே.

வ இலங்கைப் பாடசாலைகளில் சராசரிக்கதிகமாக ஆசிரியர்களிருக்கும் அதே நேரத்தில் தென்னிலங்கையில ஆசிரியர்களின்றித் தமிஅப் பாடசாலைகள் மூடபபடுகின்றன. தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்ட செய்திகளைக் கேள்விப்பட்ட பின்பும்கூட நாம் வடஇலங்கையை விட்டு நகரமாட்டோம் என்று ஆசிரியர்கள் யாராவது சொல்லக்கூடுமாளுல் அவர்கள் ஆசிரிய உலகில் தொடர்ந்திருக்க அருகதை உடையவர்கள் தானு என்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

அரசினர் பாடசாலை ஆசிரியர்கள், வெளிமாகாண ஆசிரியர்கள், நீதிபதிகள், பத்திரிகைகள் பாராளுமன்றஉறுப்பினர்கள், பெற்ருேர்கள், மாணவர்கள் அனைவருமே ஆசிரியர்களின் இடமாற்றத்தை வற்புறுத்தியதன் காரணமாக அகிலஇலங்கைத் தமிழாசிரியர்சங்கமும், வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கமும் ஒரு இணக்கமான முடிவுக்கு வந்திருப்பதை அறிந்து அவர்களைப் பாராட்டுகிருேம்.

இடமாற்றம் பெற்றுச் செல்லும் அனுபவமின்மையால் சிலர் வருந்துகின்றனரே தவிர அச்சத்துக்கெவ்வித காரணமுமில்லை. ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச்செல்வது ஆசிரியர்களுக்கும் பாடசாலைகளுக்கும் நல்லது. ஆசிரியர்கள் பண்புடையவர்களாக மாறவும், பாடசாலைகள் புதுப் புது அனுபவங்களைப் பெற்றுக் கல்விநிலையில் உயரவும் வாய்ப்பேற்படும்.

இடமாற்றம் குறித்து ஆசிரியர்கள் பயப்படுவவதற்கு அரசாங்கமும் ஓரளவு காரணம் எனலாம். நிரந்தர இடமாற்றத்திட்டமொன்று அதனிடம் இல்லை. கஷ்டமான இடங்களில் சேவை புரிபவரைப்பற்றியோ அல்லது வசதியான இடங்களில் கடமைபுரிபவரைப்பற்றியோ அது சட்டைசெய்வதில்லை. இந்த நிலையில் ஆசிரியர்களின் அச்சத்தைப் போக்குவது எப்படி.

கஷ்டமான இடங்களில் இரண்டு வருடங்கட்கும்; வசதியான வெளிமாகாணங்களில் ஐந்துவருடங்களுக்கும் குறையாமல் சேவை செய்த ஆசிரியர்களுக்கு சொந்த இடங்களிலோ வசதியில்லையேல் அருகாமையிலோ சேவை செய்யும் வாய்ப்பை அளிக்கும் நிரந்தர இடமாற்றத் திட்டமொன்று உடனடியாக வகுக்கப்படல் வேண்டும். கஷ்டமான இடங்களுக்கும், தூரமான இடங்களுக்கும் மாற்றம் பெற்றுச் செல்பவர்கட்குத் தூண்டுதல் அலவன்ஸ் வழங்கப்படவேண்டும். இக்கோரிக்கையைக் கல்வி மந்திரி அங்கீகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அரசினர் பாடசாலை ஆசிரியர்கள் - சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் என்ற பேதம் அருகிப்போய் விட்ட இந்நாளில் மீண்டும் மீண்டும் பேதத்தைப் புதுப்பித்துப் பெரிதுபடுத்தாமல் தமிழ் ஆசிரியர் அனைவரும் ஒரே தொழிற் சங்கமாய் இயங்குதலும் ஒரே சேவை மூப்பட்டவணையின் கீழ் கொண்டுவரப்படுதலும் அத்தியாவசியம்.

இவ்வகையில் இணங்கி ஆசிரியர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், கல்வி அதிகாரிகளும் ஒரு நிரந்தர இடமாற்றத் திட்டத்தை வகுத்து அதை அமுல் நடத்தச் செய்வதன் மூலம் 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை' செய்யலாம். தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படாமல் தடுக்கலாம். தமிழ் மாணவரின் கல்வி நிலையைக் குன்ருமல் வளர்க்கலாம்.

இந்த நல்ல இலட்சியம் நிறைவேற எல்லாத் தமிழாசிரியர்களும், எல்லாத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைக்கவேண்டும்.

ஐ. ஆ. இராமசாமி,
தலைவர்,
அ. இ. அ. பா. த. ஆ. சங்கம்
தீவகக் கிளை.

## கம்பன்விழா

யாழ்ப்பாணம், சனி

இலங்கைக் கம்பன் கழகம் கம்பன்விழாவை இம்மாதம் 27,28-ம் திகதிகளில்கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்துவருகின்றது.

அண்ணமலைப் பல்கலைக் கழகத்திராவிடமொழியியற் துறைத்தலைவர் பேராசிரியர் தெ. பொ. மீனட்சிசுந்தரனர்இவ்விழாவுக்குத்தலைமை தாங்கவிருக்கின்ருர்.

கருத்து மஞ்சரியென்னும் புதிய நிகழ்ச்சியொன்றும் விழாவில் இடம்பெறுகின்றது. அரசியற்கட்சித் தலைவர்களும், இலக்கியத்துறை அறிஞர்களும் கலந்துகொள்ளும் இந்நிகழ்ச்சிக்கு, இலங்கைப்பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் வி. செல்வநாயகம்தலைமைதாங்குகின்ருர்.

பிரபல நாகசுர, தவிற்கலைஞர்களின்இசைநிகழ்ச்சிகள், நாடகம், வில்லுப் பாட்டு, கதாப்பிரசங்கம் முதலிய கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

விழாவில், விபுலானந்தக் கவிகள் வெளியீடு நடைபெறும்.

## வேலையற்ற வாலிபருக்கு காணி

கொழும்பு, வெள்ளி

வேலையற்றிருக்கும் 3000 வாலிபர்களுக்கு 20குடியேற்றத் திட்டங்களில் காணி வழங்கப்படும்.

வடமாகாணத்திலுள்ள இரு குடியேற்றத் திட்டங்களில் சுமார் 600 வாலிபர்களுக்கு காணி வழங்கப்படும். வடமாகாணத்தில் சிவம் ஆண்டகுளம், முதியன்கட்டுகுளம் ஆகிய இடங்களில் காணிவழங்கப்படும்.

## ஐயாறன் எழுதுகிறது

காலை சுமார் ஒன்பது மணி இருக்கும். கொழும்பிலே ஒருசந்தியில் பஸ்ஏற முயன்றேன். அதை ஒரு பெரிய வித்தை என்றே கூறவேண்டும்.

பஸ்ஸுகள் அடிக்கடி வருகின்றன. என்ருலும் வரும்போதே ''புல் லோடு''. நிற்கவும் இடமின்றி மக்களை ஏற்றிக் கொண்டு பஸ்வருகிறது. ஸ்டாண்டிலும் அதிக கூட்டம். வஸ் வந்து நின்றதும், இரண்டொருவர்இறங்குகின்றனர். பலபேர் அதில் ஏற முண்டியடிக்கிருர்கள். 'கியூ' வரிசை எதுவும் கிடையாது. பலவானுக்குத்தான் வெற்றி.

பாவம்! பலபெண்கள் இக்கூட்டத்தை தள்ளிக் கொண்டு ஏற முயன்றனர். முடியுமா? பெண்களுக்காக யார் வழிவிடுகிருர்கள்? பல பஸ்களில் ஏற முயன்று முயன்று பார்த்து முடியாமல் அடுத்த பஸ்ஸுக்காக ஏங்கிக் காத்திருக்கிருர்கள்.

சென்னையிலும் தமிழ் நாட்டிலும் பஸ்ஸிலே மூன்றில் ஒருபகுதி இடங்களை பெண்களுக்காக ஒதுக்கியிருக்கிருர்கள். அந்த இடங்கள் காலியாக இருக்கையில் பெண்களை மட்டுமே பஸ்ஸில் ஏறஅனுமதிக்கிருர் கண்டக்டர். ஆண்கள் ஏறினுலும் அந்த இடங்களில் உட்காரப்படாதென்று நியதி. ஆகவே அங்கு பெண்கள் பொதுவாகப் பஸ்ஸில் ஏறுவது இங்கிருப்பதுபோல் அவ்வளவு கஷ்டமல்ல.

அந்த முறையை இங்கும் நமது இ. போ. ச. அதிகாரிகள் பின்பற்றக்கூடாதா? இந்த சபையில் பெண்கள் இருக்கிருர்களா என்பது தெரியவில்லை. பஸ்ஸிலே பெண்கள் அதிகம் பிரயாணம் செய்வதால், இ. போ. சபைக்குப் பெண்களையும் நியமிக்கவேண்டியதே முறை. இது எப்படியாயினும், பெண்களுக்காக பஸ்ஸில் சரிபாதி இல்லாவிடினும் மூன்றில் ஒரு பகுதி இடங்களையாவது ஒதுக்கச் செய்யவேண்டும்.

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமானமென்று பாரதியார் பாடினுர்தான். என்ருலும் பஸ்ஸிலே பெண்களுக்கு போதிய இடம் ஒதுக்குவதே நம் பண்பாட்டிற்கு அழகு. பஸ் ஸ்டாண்டிலே ஆண்களுடன் பெண்கள் 'குஸ்தி' போட்டு பஸ்ஸில் ஏறவேண்டி இருப்பதும், ஆண்கள் அமர்ந்திருக்க அவர்கள்நிற்கவேண்டியிருப்பதும் பெரிய அநாகரிகமாகும். இந்தக் கண்ணராவியைப் பார்த்தால் பிறநாட்டினர் நம்மைப் பற்றி என்ன நினைப்பர்? பெண்மைக்கு எவ்வளவு விசேஷ மரியாதை அளிக்கின்ருேமோ அவ்வளவும் நம் பண்புக்குப் பெருமையாகும். இ. போ. ச. அதிகாரிகள் இதை உடன் கவனிப்பார்களா? பெண்களின் நலனில் அக்கறையுள்ள எம். பி. க்களும், ஸ்தானங்ளும் இதில் விசேஷ கவனம் எடுக்கவேண்டும்.

இ.போ. சபையிலுள்ள மெம்பர்கள் இந்தியா பார்த்திருக்கிருர்களா? அவர்கள் ஒருமுறை சென்னைக்குச் சென்று பார்த்துவிட்டு வருமாறு அனுப்புவது பலவிதங்களிலும் நல்லதாகும்.

ஃ ஃ ஃ

இலங்கை போக்குவரத்து சபைக்கு நடப்பு வருடத்திலே எதிர்பார்த்த வருமானத்துக்குமேல், முதல் 9 மாதங்களிலேயே கிடைத்துவிட்டதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். பலே பலே. இதற்காக இ. போ.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிகால் மீண்டும் ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்பார்

## மக்களுக்கு 75 வயது அதிபரின் அறிவிப்பு

பாரிஸ், நவ. 5

**அடுத்த 7 ஆண்டு காலத்துக்கு தாம் மீண்டும் பிரெஞ்சு ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்கப் போவதாய் அதிபர்டிகால் அறிவித்திருக்கிறார்.**

இம்மாதம் 75 வயதை அடையும் ஜெனரல் டிகால், ரேடியோ டெலிவிஷன் மூலம் தமது முடிவை மக்களுக்கு அறிவித்தார்.

பிரான்ஸ் ஒரு உள்நாட்டு யுத்த விளிம்பிற்கு வந்தபோது அதைக் காப்பாற்ற தாம் ஏழாண்டுகளுக்குமுன், முன்வந்ததை டிகால் ஞாபகப்படுத்தினார்.

ஒரு ஸ்திரமான, திறமையான பிரெஞ்சு ஆட்சியின் தேவையை அவர் வற்புறுத்தினார்.

டிசம்மர் 5-ம் திகதி பிரெஞ்சு ஜனாதிபதிதேர்தல் நடைபெறவிருக்கிறது.

# டாக்காவில் அயூப் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## ஏராளமானோர் கைது

டாக்கா, நவ. 5

கிழக்குப் பாகிஸ்தானில் முஸ்லிம்லீக் கட்சி நடத்திய ''இந்தியாவை நசுக்கு'' ஆர்ப்பாட்டத்தை அடுத்து டாக்காவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து 20 முஸ்லிம் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.

அங்கு இந்திய வானொலிச் செய்திகளைக் கேட்பவர்கள் மீது பொலிசார் கண்காணிப்பு செய்து வருகிறார்கள் என்றும் சிறுபான்மையினரிடமிருந்து 300 ரேடியோச் செட்டுகள் கைப்பற்றப்பட்டனஎன்றும்கூறப்படுகிறது.

விடுதலை இயக்கம் நாளுக்குநாள் வலுத்துவருவதாயும், கடந்த 2 மாதத்தில் 2000க்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது. தொடர்ந்து இக்கைதுகள் நடைபெறுகின்றனவாம்.

வங்காளிகளை கொள்ளையடிப்பதை மேற்கு பாகிஸ்தான் நிறுத்த வேண்டும்என அயூப் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் போதிக்கப்பட்டதாம்.

## பாரத ஆட்சேபனை

புதுடில்லி, நவ. 5

டாக்காவிலுள்ள இந்திய துணை ஹைகமிஷன் காரியாலயத்தில் பாகிஸ்தானிய பொலிஸார் புரிந்த அட்டூழியம் குறித்து இந்தியா ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது. ஹைகமிஷன் சிப்பந்திகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்றும் விசா காரியாலயம் பலவந்தமாக மூடப்பட்டதென்றும், ஹைகமிஷன் கைப்பற்றப்பட்டதென்றும் இந்த ஆட்சேபனையில் கூறப்பட்டிருக்கிறது.

## ரூபா 40 கோடி உர தொழிற்சாலை

பம்பாய், நவ. 5

40 கோடி ரூபாய் செலவிலான டிராம்பேயிலுள்ள ரசாயன உரத்தொழிற்சாலை நாளை திறந்துவைக்கப்படும். இதன் உற்பத்தி காரணமாக 10 லட்சம்டன் அதிக உணவு உற்பத்தி செய்யச் சாத்தியமாகும் என்றும், ஆண்டு ஒன்றுக்கு ரூபா 15 கோடி அன்னியச் செலாவணியில் மிச்சம் ஏற்படும் என்றும் கூறப்படுகிறது.

## காதலியைச் சுட்டுக் கொன்ற நடிகர்

இண்டியோ(கலிபோர்னியா), நவ 5

மூன்னாள் நடிகர் டொம் நீல் தனது மனைவியுடன் காதல் விளையாட்டிலீடுபட்டிருந்தபோது தற்செயலாக அவளைச் சுட்டுக் கொன்றுவிட்டதாக நீதிமன்றத்தில் கூறினார்.

51 வயதான நீல், 29 வயதான அழகு கெயிலை சுட்டுக் கொன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது.

தன் மனைவியின் .45 ரக கைத்துப்பாக்கி கிடந்த மேஜையினருகே, தாங்கள் இருவரும் கட்டித் தழுவிக்கொண்டிருந்ததாய் நீல் கூறினார். 'என்னிடம் நீ விஸ்வாசமாய் இருக்கவில்லை என மனைவியிடம் கூறியபோது, அவள் கைத்துப்பாக்கியை எடுத்தாள்' ன்றும் அவர் கூறினார்

(பி. டி. ஐ)

## பிரிட்டிஷ்-ரஷ்ய பிரதமர்கள் சந்திப்பர்

லண்டன், நவ. 5

சோவியத் பிரதமர் திரு கோஸிஜினும் தாமும் உரிய சமயத்தில் சந்திக்க கொள்கையளவில் உடன்பட்டிருப்பதாக பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் அறிவித்தார்.

வருகிற 29ம் திகதி வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்டுவர்ட் மாஸ்கோ செல்கிறார். 6 நாள் சோவியத் தலைவர்களுடன் அவர் நடத்தும் பேச்சுக்கள் வில்சன்-கோஸிஜின் சந்திப்புக்கு பூர்வாங்கமாய் இருக்குமெனத் தெரிகிறது.

## வியட்னும்

சைகோன், நவ. 5

தென்வியட்னுமில் வியட்காங்கியர்மீது நடைபெற்ற தூண்டுதலில் இருதரப்பாருக்கும் பலத்தஉயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது. வடவியட்னுமில் ஒரு அமெரிக்க விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

# அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கு தோல்வி

## அல்ஜியர்ஸ் மகாநாடு ஒத்திவைப்பு குறித்து சீனு

ஹாங்காங், நவ. 5

இரண்டாவது ஆசிய-ஆபிரிக்க மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மீது கொண்ட வெற்றி என சீனு கூறியிருக்கிறது.

சீனக் கம்யூனிஸ்டகட்சிப் பத்திரிகையான பீகார் டெய்லியின் முதல்பக்க தலையங்கத்தில் ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் ஐக்கியத்தைஅது கோரியிருக்கிறது.

''ஆசிய-ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 200 கோடி மக்களின்அபிலாஷையையே இந்த ஒத்திவைப்பு காட்டுகிறது. ஆபிரிக்க-ஆசிய ஐக்கியம், கட்டுக்கோப்புக்கு இந்த ஒத்திவைப்பு ஒரு வெற்றியாகும். ஆசிய-ஆபிரிக்க நாடுகளுக்கும் மக்களுக்கும் இது ஒரு வெற்றி. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் இது ஒரு தோல்வி. ஆசிய-ஆபிரிக்க நாடுகளை இந்தச் சக்திகள் பிளவுபடுத்த முயன்று 'தோல்வியுற்றன'' என்றும் அது கூறுகிறது.

பி. டி. ஐ.

## பாதுகாப்பு சபையில் 5 நாடுகள் தீர்மானம்

நியுயோர்க், நவ. 5

இன்றிரவு கூடவிருக்கும் பாதுகாப்பு சபையில் 5 நிரந்தரமில்லாத அங்கத்துவ நாடுகள் இந்தியாவும், பாகிஸ்தானும் தங்கள் படைகள் வாபஸ் பெறுவதற்கான திட்டத்தை வரையும்படி கோரும் தீர்மானம் ஒன்றைத் தாக்கல் செய்யவிருக்கின்றன.

பொலீவியா, ஐவரிகோஸ்ட், மலேஸியா, நெதர்லாந்து, உருகுவே ஆகிய ஐந்து நாடுகளே அவை. ஜோர்டான் இதில் சேரவில்லை.

சபையின் கடந்த செப்டம்பர் மாதம் 20-ம் திகதி தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்வதுடன், யுத்தநிறுத்தம், படைவிலக்கம் ஆகியவற்றில் ஐ. நா.வுக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறும் அது இரு நாடுகளையும் கேட்டுக் கொள்கிறது.

## விசாகபட்டணம் கப்பல்துறை விருத்தி

விசாகபட்டணம், நவ. 5

விசாகபட்டணம் கப்பல் கட்டும் துறையில் ஆண்டு ஒன்றுக்கு 6 கப்பல்கள் கட்டும்பொருட்டு, விஸ்தரிப்புத்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தற்போது ஆண்டு ஒன்றுக்கு 3 கப்பல்கள் அங்கு கட்டப்படுகின்றன. ஒரு கப்பலின் விலை ரூ. 185 லட்சம்.

## அமெரிக்காவில் மார்கரெட்

வாஷிங்டன், நவ. 4

இளவரசி மார்கரெட்டும், அவரது கணவன் ஸ்னோடவுன் பிரபுவும் அமெரிக்கா வந்து சேர்ந்தனர். ஜனாதிபதி ஜோன்ஸன் அளிக்கும் விருந்தில் கலந்துகொண்டுவிட்டு, அவர்கள் நியுயோர்க் செல்வார்கள்.

# சிங்கப்பூர் - இந்தோனேஷிய வர்த்தகம் ஆரம்பித்தால் . . .

## ஊடுருவல் அபாயம் ஏற்படுமா?

சிங்கப்பூர், நவ. 5

சிங்கப்பூருக்கும் இந்தோனேஷியாவுக்குமிடையே டிசம்பருக்குமுன் வர்த்தகம் மீண்டும் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தோனேஷியாவுடன் வர்த்தகம் நடத்தவிரும்பும் சிங்கப்பூரின் யோசனைகளை மலேஷியாவும், பிரிட்டனும் பரிசீலித்துவருவதாய்க் கூறப்படுகிறது.

வர்த்தகர்கள் என்ற பெயரில் நாசவேலைக்காரர்களும், ஆயுதங்களும் சிங்கப்பூரிலும் பின் மலேஷியாவிலும் ஊடுருவல் செய்யாமலிருக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவேண்டியிருக்கும் என கருதப்படுகிறது. இந்த வர்த்தகத்தினுல் அபாயமான விளைவுகள் ஏற்படமாட்டாது என சிங்கப்பூர் அதிகாரிகள் நம்புகின்றனர்.

சிங்கப்பூரிலிருந்து 12 மைல் தூரத்திலிருக்கும் புலோ செனுங் என்ற தீவில் இருநாடுகளுக்குமிடையே பண்டமாற்று ஏற்படவேண்டும் என்பது சிங்கப்பூரின் திட்டம்.

பி. டி. ஐ.

## சைப்பிரஸில் சண்டை

நியுயோர்க், நவ. 5

சைப்பிரஸ் நிலைமை பற்றி விவாதம் நடத்தும் பொருட்டு பாதுகாப்புசபையின் அவசரக்கூட்டம் ஒன்றை துருக்கி கோரியிருக்கிறது. சைப்ரஸில் நிக்கோஸியா, பாமகுஸ்டா நகரங்களில் இரு சமூகத்தினரும் துப்பாக்கிச்சண்டையில் ஈடுபட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## ஜோன்ஸன் எச்சரிக்கை

வாஷிங்டன், நவ. 5

ரொடீஷியா ஒருதலைப்பட்சமாக சுதந்திரப்பிரகடனம் செய்தால் ஆபத்து ஏற்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் பிரதமர் வில்சனுக்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பினார்.

ஸாலிஸ்பரியில் வில்சன்—ஸ்மித் சம்பாஷணை நடைபெற்றபோது இக்கடிதம் அனுப்பப்பட்டதாம்.

காணவில்லை

## 5 லட்சம் பேருக்கு போதுமான நஞ்சு

லண்டன், நவ. 5

லண்டன் விமானநிலையத்திலிருந்து காணமற்போன 30 ராத்தல் நஞ்சு இப்போது தேடப்பட்டுவருகிறது. இக் கொடிய நஞ்சினல் 5 லட்சம் பேரைக் கொல்லமுடியும் எனக் கூறப்பட்டது. பொலிசார் இதைக்கண்டுபிடிக்க தீவிர வேட்டையில் இறக்கியிருக்கிறார்கள்.

பி. டி. ஐ.

## கஸவுபு, மொபுட்டு

லியப்போல்ட்விலி, நவ. 5

காங்கோ ஜனாதிபதி கஸவுபு, தனது 35 வயதான சேனாதிபதி மொபுட்டுவை மேஜர்ஜெனரல் அந்தஸ்திலிருந்து லெப்டினண்ட் ஜெனரல் அந்தஸ்துக்கு உயர்த்தியிருக்கிறார்.

பி. டி. ஐ.

## தீக்குளித்த அமெரிக்கர்

### வடவியட்னும் பாராட்டு

ஹாங்கங், நவ. 5

நோர்மன் ஆர். மொரிஸன் என்ற இளம் அமெரிக்கர், தீக்குளித்த செயல், வியட்னுமில் ஜோன்ஸன் நிர்வாகம்மேற்கொண்டிருக்கும் அட்டூழியத்தை மேலும் பல அமெரிக்கர்களுக்கு உணர்த்துவதாய் இருக்கும் என வடவியட்னும் கூறியிருக்கிறது.

பி. டி. ஐ.

## நீக்ரோக்கள் வெற்றி

நியுயோர்க், நவ. 5

அமெரிக்க ஸ்தலஸ்தாபன தேர்தல்களில், 4 ராஜ்யங்கள் நீக்ரோக்களை முன்னணிக்குகொண்டு வந்திருக்கின்றன. மிச்சிக்கன், ஒஹியோ, பென்ஸில்வேனியா ஆகிய ராஜ்யங்களில் மேயர் பதவி முதல் சேர்க்யூட் நீதிபதி பதவிவரை அவர்கள் பெற்றுர்கள்.

கிளிங்லாந்தில் கார்ல் பி. ஸ்டோக்ஸ் என்ற முதல் நீக்ரோ மேயராயிருக்கிறார். டீட்மியர் நகரில் மற்ருேர் நீக்ரோவான டீட்மியர் மேயராயிருக்கிறார்.

மிச்சிக்கனில் ஒரு நீக்ரோ சேர்க்யூட் நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பி.டி.ஐ.

## சிக்கிமில் தேர்தல்

கேங்டாக், நவ. 5

சிக்கிமில் 3-வது பொதுத் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறுமென மன்னர் அறிவித்திருக்கிறார்.

## பாகிஸ்தான் யோசனை

ராவல்பிண்டி, நவ. 5

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் தங்கள் நாடுகளில் காவலிலுள்ள பாகிஸ்தான் இந்திய பிரஜைகளை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள பாகிஸ்தான் யோசனை கூறியிருக்கிறது.

டில்லியிலுள்ள பாகிஸ்தான் தற்காலிக ஹைகமிஷனர் காவல் முகாம்களுக்குச் சென்று பார்த்து அங்குள்ள பாகிஸ்தானியர்நன்கு நடத்தப்படுவதாய்த்திருப்திதெரிவித்தார்.

## ''தேசியமயம் இல்லை'' -அரீப்

பாக்தாத், நவ. 5

ஈராக்கில் எண்ணெய்க்கம்பெனிகள் தேசிய மயமாக்கப்படமாட்டா என ஜனாதிபதி அரீப் தெரிவித்திருக்கிருர்.

## ரங்கூனிலிருந்து புறப்பட்டது

ரங்கூன், நவ. 5

'மொஹமெதி' என்ற கப்பல் 1464 பர்மா இந்தியர்களை ஏற்றிக்கொண்டு சென்னை புறப்பட்டது. இது இந்தியா திரும்பும் 67-வது இந்தியர் கோஷ்டியாகும்.

சிங்கப்பூர்

## ரஷ்யாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்

சிங்கப்பூர், நவ. 5

சிங்கப்பூரிலுள்ள தளத்திலிருந்து பிரிட்டன் வெளியேறினுல், சிங்கப்பூர் ரஷ்யாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளும் என வெளிநாட்டு மந்திரி திரு. இராஜரத்தினம் அறிவித்தார். ஏனெனில் சிங்கப்பூர் தனியாகத் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் சக்தியுடன் இல்லை என்ருர் அவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். நகரில்

# "கண்ணியமான பஸ் ஊழியரே கடமையாற்றவேண்டும்"

## சங்கானை பட்டினசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''பொதுமக்களுடன் மரியாதைக் குறைவாகவும், கீழ்த்தரமான முறையிலும் நடந்துகொள்ளும் பஸ்ஊழியர்களுக்குப் பதிலாகக் கண்ணியமான முறையிலும் மரியாதையுடனும் நடந்து கொள்ளும் ஊழியர்களை யாழ்ப்பாணம் பஸ்நிலையத்துக்கு மாற்றம்செய்யவேண்டும்.''

சங்கானைப் பட்டினசபையின் மாதாந்தக்கூட்டம், திரு. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை திரு.சி க. திருச்சிற்றம்பலம் பிரேரித்தார்.

இத்தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் வேலைசெய்யும் நேர அட்டவணைப் பாதுகாப்பாளர்கள் பஸ்கம்பனி காலத்தில் நிமிக்கப்பட்டவர்கள். அப்பொழுது கல்வித் தராதரம் கணக்கிடப்படவில்லை. ஆதலால்அவர்கள்தற்போது பொதுமக்களுடன் மரியாதைக்குறைவாகவும், மிகவும் கீழ்த்தரமான முறையிலும் நடந்துகொள்கிறார்கள். சில சமயங்களில் பேசத்தகாத வார்த்தைகள்கூட இவர்களால் உபயோகிக்கப்படுகிறது. தாங்கள் பொதுமக்களின்கள் ஊழியர் என்பதை இவர்கள் முற்றாக மறந்துவிடுகின்றனர். ஆதலால் பொதுமக்களுடன் கண்ணியமானமுறையிலும், மரியாதையுடனும்நடந்துகொள்பவர்களை இப்பகுதிக்கு இடமாற்றம்செய்து பொதுமக்களுடனும், இ.போ. ச.வுடனும் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துமாறு யாழ். பிரதேச இ. போ. ச. முகாமையாளரை இச்சபை கேட்டுக் கொள்கிறது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும்பிரேரணைகள் வருமாறு:

''அண்மையில் நீதியரசர் ஒருவர் கூறியிருந்ததற்கு அமைய இந்நாட்டில் குற்றங்கள் அதிகரிப்பதற்குக் காரணம், சரியானமுறையில் சட்டத்தைப் பாதுகாக்கவேண்டிய பொலிஸார் விசாரணை செய்யாததே என்பது புலனாகிறது. இப்படி நீதியரசர் கூறும் கூற்றுகளில் பொலிஸ் அதிபர் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இச்சபை கோருகிறது.

நாட்டிலுள்ள சகல அரசாங்க இலாகாக்களிலும், கூட்டுத் தாபனங்களிலும் லஞ்ச ஊழல் மலிந்துள்ளதால் இவ்வித ஊழல் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கவேண்டிய திருத்தங்களை லஞ்ச மசோதாவில் கொண்டுவந்து பாமரமக்களைக்கெடுபிடியிலிருந்து காப்பாற்றும்படி நீதியமைச்சரை இச்சபை கேட்டுக் கொள்கிறது.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)

தீவொளி (நுவரேலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

''நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்''

எம். ஜி ஆர். — சரோஜாதேவி

(இருவேடங்களில்)

ரங்கராவ் நம்பியார், தங்கவேலு, ரத்னா, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி

நடித்த



விஜயா கம்பைன்ஸ்

எங்கவீட்டுப் பிள்ளை

(ஈஸ்மென்கலர்)


வாணி கலைக்கழக

## 9வது ஆண்டு நிறைவுவிழா

யாழ்ப்பாணம், சனி

இன்று சனிக்கிழமை முற்பகல் 10-30 தொடக்கம் பிற்பகல் 6 மணிவரை வாணி கலைக்கழக 9வது ஆண்டுநிறைவுவிழா அல்வை சின்னத்தம்பிப் புலவர் வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. சிறப்பு நிகழ்ச்சியாக வேலனின் ஓவியக் கண்காட்சி இடம்பெறவிருக்கிறது. ஓவியக்காட்சியை உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் திறந்துவைப்பார். திரு. கே. சதாசிவம் வரவேற்புரை நிகழ்த்துவார். ஓவியர் கரவை வேலனைப் பாராட்டி பொன்னாடை போர்த்தப்படும். இவல் பகுதியில் திருவாளர்கள் ஆறுமுகவடிவேல், சோ. இளமுருகனார், சி. வல்லிபுரம், பரநிருபசிங்கம், கனகசெந்திநாதன், இ. வைத்திலிங்கம் உட்படப் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்,

இசை நிகழ்ச்சி இரவு 7 மணிக்கு தலைவர் அ. சு. விஸ்வநாதன் தலைமையில் நடைபெறும். இசைமணி திரு.கே.துரைராசா, இசைஞானி பூமணி இராசரத்தினம், இசைத்தென்றல் ஞானதேவி தியாகராசா, செல்வியர் பாரதா சாரதா, வாணி மாணவர் ஆகியோரின் இசைநிகழ்ச்சிகளை அடுத்து மங்களஇசை இடம் பெறும். நடன நிகழ்ச்சிகள் திரு. ஜே. டி. அனல்ட் தலைமையில்நடைபெறும். வாணி கலைக்கழக மாணவர் தேவாரப்பாடலையடுத்து கீதாஞ்சலி வி. கே. நல்லையாவின் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

---

## 'கொழும்புப் பெண்' வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் வருகிற ஞாயிற்றுக்கிழமை மாலை திரு. பொ. சண்முகநாதன் எழுதிய நகைச்சுவைக் கட்டுரை தொகுதியான 'கொழும்புப் பெண்' வெளியீட்டுவிழா நடைபெறவிருக்கிறது.

கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் யாழ். மேயர் திரு. எஸ். சி. மகாதேவா, திருவாளர்கள் ரீ. பாக்கியநாயகம், வே. க. இராசலிங்கம், சி. சரவணபவன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். கலையரசு க. சொர்ணலிங்கம், மு. ஆலாலசுந்தரம், தேவன் ஆகியோர்சிறப்புரை நிகழ்த்துவர்.

---

## இலங்கை செனட்டர்கள் எம்.பி.க்கள் வேண்டுகோள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

சிறைவைக்கப் பட்டிருக்கும் முன்னைநாள் அல்ஜீரிய அதிபர் ஜனப் பென்பெல்லாவுக்கு மனித உரிமைகள் வழங்கும் படியும் அவரை அவரது தாயார் சென்று பார்க்கவும் அவரைச் சென்று சந்திக்க விரும்புவர்களை அவர் சந்திக்க அனுமதிக்கும்படியும் இலங்கை செனட்டர்களும் எம். பி. க்களும் தற்போது அல்ஜீரிய அதிபராக இருக்கும் கேர்ணல் போமடினேயுக்கு வேண்டுகோள் விடுக்க விருக்கின்றனர்.


REGAL—JAFFNA

NOW SHOWING!

TONY RUSSEL, HELGALINE

in

The Secret 7

(M G M's Scope-Eastman Color)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சிரமதானமூலம் பென்ஷன் கிடைக்கும்

பம்பலப்பிட்டி, வெள்ளி

காலி மாவட்டத்தில், ஆசிரியர்பளுக்கு வழங்கப்படாமலிருந்துவந்த பென்ஷனை வழங்கும்பொருட்டு கொழும்பு கல்வி இலாகாவிடமிருந்துசுமார் 50 உத்தியோகத்தர் சிரமதானமூலம் கடமையாற்றச் சென்றுள்ளனர்.

சிரமதானமாகச் செய்யப்படும்இவ்வேலையில் மேலும், காலி கல்வி இலாகாவைச் சேர்ந்த 50 உத்தியோகத்தர்கள் கலந்துகொள்வார்கள். சிரமதானஇயக்கத்தை மற்ற. மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

---

## பிரதம வைத்திய அதிகாரி இல்லை

காங்கேசன்துறை,வெள்ளி

காவகேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் சுமார் 6 மாத காலமாக பிரதம வைத்திய அதிகாரி இல்லாமல் இயங்கிவருகிறது. இருந்த வைத்திய அதிகாரிவேறு இடத்திற்கு மாற்றலாகிச் சென்றும் இதுவரை அவரின் இடத்திற்கு வேறு எவரும் நியமிக்கப்படாமையால் நோயாளர்கள்மிகவும் கஷ்டப்படுவதாக அறியப் படுகிறது.

---

## விஷமிகள்பற்றி விசாரணை

கொழும்பு, வெள்ளி

புகையிரதங்கள் உரிய நேரத்துக்குச் செல்ல முடியாதபடி தடைப்படுத்தக் கூடியவகையில் முயற்சிகள் செய்யும் விஷமிகள்பற்றி விசாரணை செய்யுமாறு ரயில்வே ஜெனரல் மனேஜர் திரு. பி. ரம்பாலா ரயில்வே விசாரணைக் குழுவிடம் தெரிவித்துள்ளார்.

---

பம்பலப்பிட்டி,வெள்ளி

கொழும்பு விவேகானந்த சபையின் 37-வது அகில இலங்கை சைவசமயப் பாடப் பரீட்சை வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் இலங்கையின் சகல பாகங்களிலுமுள்ள 323 பரீட்சை நிலையங்களில் நடைபெறவிருக்கிறது.

## நாய் கடித்து சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருக்கோணமலையில் 3 மாதங்களுக்கு முன் நாயினால் கடிபட்ட ஒரு சிறுவன் தீபாவளி கொண்டாடுவதற்காக யாழ்ப்பாணம் வந்தபோது மரணமான சம்பவமொன்று ஊர்காவற்றுறையில் நிகழ்ந்துள்ளது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 4 வயதான என். நித்தியானந்தராசா என்பவரின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ்ப்பாணம்நகரப்பகுதி மரணவிசரரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை செய்தார். காலஞ்சென்றவரின் தந்தை கந்தையா நடராசா சாட்சியமளித்தபோது கூறியதாவது;

காலஞ்சென்றவர் எனது ஒரே மகன். நான் திருக்கோணமலையில் ஒருதொழில் நடத்தி வருகிறேன். 3 மாதத்துக்குமுன் எனது மகனுக்கு ஒரு நாய் கடித்தது. தீபாவளிக் கொண்டாட்டத்திற்காக நாங்கள் யாழ்ப்பாணம் வந்தோம். கொண்டாட்டம் முடிந்த பின் சென்ற மாதம் 30-ம் திகதி திருக்கோணமலைக்குப் புறப்பட ஆயத்தம் செய்த சமயம் மகனுக்குத் திடீரெனக் காய்ச்சல் வந்தது. முதலில் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன். அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

டாக்டர் செல்வி எஸ். செல்வரத்தினம் சாட்சியமளித்தார். நாய்க்கடிவலியினால் ஏற்பட்ட இயற்கை மரணமெனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

---

## கிழங்கு வந்துவிடும்!

பம்பலப்பிட்டி, வெள்ளி

அடுத்த இரண்டு வாரத்திற்குள் வழக்கமாகக் கப்பலில் அனுப்பப்படும் உடுளைக் கிழங்கு வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாதம் 10ம் தேதி 1000 டன் உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்படும். நவம்பர் 15ம் தேதி மேலும் 2000 டன் கிழங்கு தனிப்பட்ட வர்த்தகர்களுக்கும் கூட்டுவுறமொத்த ஸ்தாபனத்திற்கும் கிடைக்கும் எனத் தெரியவருகிறது.


இறக்குமதியாளர்களே!

உங்கள் கோட்டாக்களை விவேகமாக உபயோகியுங்கள்.

வெகு பிரசித்திபெற்ற சுடுதண்ணீர்ப் போத்தல்களான

THERMOS

REGISTERED TRADE MARK

தேர்மஸ்

வக்கூம் பிளாஸ்குகளையே வாங்குங்கள்.

விசாரணைகளுக்கு:

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்,

இன்டென்ற் இலாகா,

54, பாங்ஷால் வீதி, கொழும்பு-11.

தொலைபேசி: 3603, & 3634.

## விளம்பரம்

**ORDER ABSOLUTE
IN THE
FIRST INSTANCE**

In the District Court of Poinr Pedro.

In the matter of the Last Will and Testament of the late Sabapathippilai Thurirajah of Valvettiturai.

Deceased.

Testamentrary Jurisdciction } No 841/T.

Kanapathippillai Saravanapava of Valvettiturai.

Petitioner.

This matter coming on for disposal before M. M. Abdul Cader, Esquire, District Judge. Point Pedro on the 8th. day of September, 1965 in the presence of Messers. Ratnasingham and Subramaniam Proctors on the part of Petitionar and the affidavit o the petitioner dated the 21st day of August. 1965 (2). the attesting Notary Public (3) and the witness dated 27th. day of August, 1965 having been read.

It is ordered that the Last will and Testament No. 1340 made by Sabapathippillai Thurairajah of Valvettiturai the deceased abovenamed and attested by K. K. Balasubramaniam, Notary Public on the 3rd. day of November, 1956 the original of which has been produced and is now deposited in court be and the same is hereby declared proved, and it is further ordered that the Petitioner abovenamed is in the Executor named in the said Last Will and he is hereby declared entitled to have Probate thereof issued to him accordingly on his taking the usual oath and tendering security.

This 8th. day of September, 1965.

Sgd. M. M. Abdul Cader
District Judge.

Drawn by.

Sgd. Ratnasingham & Snbra- [maniam
Proctors for Petitioner. 1235

## கேள்விப் பத்திர விளம்பரம்

மானிப்பாய் கிராம சபை அத்கிராசனரால் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் திகதி காலை 10மணி வரையும் கீழ்க்காணும் சந்தைக் குத்தகைகளை 1966-ம் ஆண்டுக்கு குத்தகை வாங்க விரும்புவோரிடமிருந்து ''சீல்'' வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் கிராமசபைக் கந்தோரில் அதன் பொருட்டு வைக்கப் பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் எதுவும் மானிப்பாய் கிராம சபைக் காரியாலயத்தில் கந்தோர் நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

1. காக்கை தீவுச் சந்தை
2. ஆனைக்கோட்டை-சாவல்கட்டுச் சந்தை.
3. நவாலி-புளியடிச் சந்தை.
4. நவாலி வடக்குச் சந்தை.

சி. மார்க்கண்டு
அக்கிராசனர்
மானிப்பாய் கிராம சபை.
1237

சினிமா விமர்சனம்

# நல்வரவு

விவாகரத்தா? இந்த முடிவுக்காகத் தான் திருமணம் செய்தோமா? மீனு தனது கணவனைப் பார்த்துக் கெஞ்சும் குரலோடு கேட்கிருள். மீனுவின் கணவனுக்கு மட்டுமல்ல, சமுதாயத்துக்கே இது நல்லதோர் கேள்வி. வெறும் பொழுதுபோக்குக்காகத் தயாரிக்காமல் நல்ல போதனையையும் புகட்டும் எண்ணத்தோடு தயாரித்திருக்கிருர்கள் 'நல்வரவு' தயாரிப்பாளர்கள்.

மீனுவாக வரும் ஈ. வி. சரோஜாவை வெகுநாட்களுக்குப் பின் பார்க்கின்ருேம். அவர் நடிப்பில் அனுபவம் பெற்றுள்ளாரென்பதைச் சில இடங்களில் நன்கு காட்டுகின்ருர். விவாகரத்து செய்துகொண்டாலும், தமக்குத் தாலி கட்டியவன் என்ற காரணத்துக்காக அந்தக் கணவனின் உயிருக்காகத் தெய்வத்தின் முன் அவர் மன்ருடி வேண்டும்போது ரசிகர்கள் கண்ணீரைத் துடைத்துக்கொள்கிருர்கள்.

முத்துராமனுக்கு வழமையான பாகம். அவர் தாம் செய்யாததவறுக்காக சிறையில் அடைக்கப்படுகிருர். சிறையிலிருந்து விடுதலை பெற்றபின் அவரதுநடிப்பில் ஒரு புதுமெருகு தென்படுகிறது. புஷ்பலதா காதல் காட்சிகளில் நன்கு சோபிக்கிருர். கவர்ச்சிகரமான முகமும், நல்ல உடல்கட்டும் கொண்ட அவரை, தமிழ்த் திரையுலகம் நன்கு பயன்படுத்தவில்லையென்றேகூறத் தோன்றுகிறது.

அசோகனுக்கு தமது 'ஸ்டண்ட்' வேலைகளைக் காட்ட சிலநல்ல சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கிறது. நன்கு பயன்படுத்துகிருர். காதல் காட்சிகளில் சிற்சில சமயங்களில் தமக்கு முன் இருப்பவர் பெண் என்பதை மறந்துவிடுகிருர் போல் தோன்றுகிறது.

'தமது வாத்தியாருக்கு' விருந்துவைத்து ரசிகர்களுக்கு நல்ல நகைச்சுவை விருந்தளிக்கிருர் நாகேஷ். ''ஏன் சேர் உங்களிடம் படிச்சவங்கள் எவருமே நூறு ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறவில்லையா'' என வாத்தியாரையே பார்த்துக் கேட்கும் கேள்வி அவர் அவிட்டுவிடும் தமாஷ்களில் ஒன்று. அவரது மனைவியாக வரும் மனோரமா நடிப்பில் நல்ல ஈடுகொடுக்கிருர்.

சுசீலா, எல். ஆர். ஈஸ்வரி எல்லோருமே பாடுகிருர்கள். ஆனல் பி. லீலாவின் பாட்டே தியேட்டரை விட்டு வெளியே வந்தபின்பும் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. 'பெண் வாழ வேண்டுமென்ருல் துணை வாழவேண்டும்' என்ற பாட்டு அற்புதமாக இசையோடு அமைந்திருக்கிறது. வசன அமைப்பு மிக நன்ருக அமைந்திருக்கிறது.

யாழ்ப்பாணம் ராஜாத் தியேட்டரில் திரையிடப்பட்டுள்ள 'நல்வரவு' பொழுதுபோக்குக்கும் நல்ல போதனைக்குமாகப் பார்க்கலாம்.

--கணேஷ்

கூடைப் பந்தாட்டம்

## கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரியின் சிறப்பான விளையாட்டு

யாழ்ப்பாணம், சனி
சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கூடைப் பந்தாட்ட போட்டியில் கிறிஸ்ரியன் கல்லூரி சென். ஜோன்ஸ் கல்லூரியை படுதோல்வியடையச் செய்து வெற்றி கண்டது. இப்போட்டியில் பங்கு பற்றிய கிறிஸ்ரியன் கல்லூரி வீரர்கள் உண்மையில் ''கூடைப் பந்தாட்டப் புலிகள்'' என்றுதான் சொல்ல வேண்டும்.

போட்டி ஆரம்பமே விறுவிறுப்பாக காணப்பட்டது. சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு கணேஸும், கிறிஸ்ரியன் கல்லூரிக்கு எஸ். தேவராஜேந்திரனும் தலைமை தாங்கினர்கள். முதலில் சென். ஜோன்ஸ் புள்ளிகளை சேகரித்தது. சிறிது நேரத்தின் பின்தான் கிறிஸ்ரியன் விளையாடத் தொடங்கியது. இடைவேளைவரைக்கும் சரியான போட்டி. சென். ஜோன்ஸ் 10 புள்ளிகளும் கிறிஸ்ரியன் 16 புள்ளிகளும் பெற்றிருந்தன. இடைவேளையின் பின் சென். ஜோன்ஸ் ''போர்'' அடிக்கத் தொடங்கி விட்டது. கிறிஸ்ரியன் வீரர்கள் முன்னேறிக் கொண்டே போனுர்கள். சென். ஜோன்ஸ் வீரர்களில் சவுந்திரநாயகம் பாராட்டுக் குரியவராவார். இவர் 10 புள்ளிகளைப் பெற்ருர். மற்றும் முறையே நித்தியசிலன், கணேஷ், சூரியகுமார் 6, 2, 1 புள்ளிகளைப் பெற்ருர்கள். ரி. ஸ்ரீரங்கன், கே. சந்திரமோகன், ஆர் சுகுணசபேசன், பி. வி. சதாசிவன் முறையே 6, 6, 4, 6 புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர். போட்டி முடிவில் கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி சென். ஜோன்ஸ் கல்லூரியை 30—19 புள்ளிகளால் தோற்கடித்தது.

சென். ஜோன்ஸ் தோல்வியுற்றதற்குக் காரணம் போதிய பயிற்சியின்மையும் விளையாட்டு ஒழுங்கு முறையின்மையுமே எனக் கூறப்பட்டது. எனினும் போட்டி ரசிகர்களுக்கு ரசிப்பாகக் காணப்பட்டது. சென், பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. எஸ். நடராஜ், திரு. எஸ். பாலசிங்கம் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தார்கள்.

## வெற்றிதோல்வியில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி
மாதகல் நுணசை இளைஞர் மன்ற கோஸ்டிக்கும் மாதகல் இளைஞர் கோஸ்டிக்குமிடையில் சினேகித பூர்வமாக நடைபெற்ற உதை பந்தாட்டப் போட்டியில் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. (1-1) திரு. நா. சண்முகம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்

## காதல் தற்கொலைபற்றி ஆச்சரியம்

வெள்ளவத்தை, வியா.
இலங்கையில் அதிகரித்துள்ள தற்கொலை எண்ணிக்கை பற்றி பம்பாய் நகர மேயர் திரு. எம். மாதவன் தனதுஆச்சரியத்தைத் தெரிவித்தார்.

தற்கொலைக்கு காதலில் ஏற்பட்ட தோல்வியே காரணமென்று தெரிவிக்கப்பட்டபோது காதலில் ஏற்பட்ட தோல்வியா அன்றேல் காதலிலிருந்து தப்பித்துக் கொள்ளவா என்று மேயர் சிரித்துக்கொண்டே குறிப்பிட்டார்.

## வரி விளம்பரம்

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

றேயன் நைலோன்புடவை தொழிற்சாலைக்கு தானுகவும், பாதி தானுகவும் இயங்கும் சக்தியுடைய தறியில் வேலை செய்வதற்கு நெசவாளர்கள் தேவை. தராதரம்: கைத்தறி நெசவில் தராதரப்பத்திரம். ஐந்தடிக்கு மேல் உயரம். பெண்கள் மாத்திரமே தேவைப்படுகின்றனர். விண்ணப்பதாரர்கள் தொழிற்சாலையிலிருந்து 1 மைல் சுற்றளவிற்குள் வசிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். கடிதம் மூலம் ஜவ்வர்ஜீ பிறதர்ஸ், 135, மீரோரமுலரூேட், வெல்லம் பிட்டியா, கொழும்பு என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1338

கைத்தறியில் தேர்ச்சி பெற்ற பெண்களும், தேர்ச்சி பெறவிரும்பும் பெண்களும் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். ''சோபனு'' இன்டஸ்றீஸ், 12 மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணம். 1200

3000 குளி சிறுவாய்க்கால் மண்வெட்டு கெந்தராத்தில் அல்லது நாள்ச்சம்பளத்திலும் உண்டு. உடன் வேலை ஆரம்பிக்க வசதியுண்டு. விவேகானந்தன் ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம். 1342

கட்டிடவேலை செய்வதற்கும், மரவேலை செய்வதற்கும் கூலி ஆட்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும் (பழைய கோழிப் பண்ணை) 6, கைலாசபிள்ளையார் கோவில் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 1343

எமது தொழிற்சாலையில் தொழிற் பயிற்சி பெறுவதற்கு 20 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 8-ம் திகதி 9 மணிக்கு நேரில்வரவும். மெரிலான்ட் இன்டஸ்றீஸ், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1344

எமது ''விடுதலை'' ஏட்டிற்கு புரட்சிகரமான கதைகள், கட்டுரைகள், கோலச்சித்திரங்கள், கவிதைகள் வரவேற்கப்படுகின்றன. திறமையுள்ளோர் 25-11-65-க்கு முன் எழுதி அனுப்பலாம். எமதுமுகவரி: மெரிலான்ட் இன்டஸ்றீஸ், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1345

புதுரக சிகறெற் சைக்கிளில் விநியோகம் செய்வதற்கு ஆட்கள் தேவை. எழுத வாசிக்க தெருந்திருக்கவேண்டும். நல்ல எதிர்காலம் உண்டு. சம்பளம் முதலியன நேரில் பேசப்படும். 8-11-65 காலை 8-00 மணிக்கு 74/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு நேரில் சமூகமளிக்கவும். 1346

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

எம் 865477, எம் 865474 இலக்க கூப்பன்கள் பஸ் ஸ்ராண்டில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. தகுந்த அத்தாட்சி காட்டி எஸ். மணியம், டாக்ஸி சாரதி 8, ஸ்ரான்லி ரூேட் யாழ்ப்பாணம். என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும். 1341

### விற்பனைக்கு

8 பொருட்கள் கொண்ட ஸ்பிரிங் குஷன் செற்றி விற்பனைக்குண்டு. விபரங்கள் நேரில். மா. கந்தையா, செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கு. 1340

இணுவில் புகையிரதஸ்தானத்திலிருந்து கிழக்கே 100 யார் தூரத்தில் மருதனுமடம்—உரும்பராய் வீதியில் ஆனைவிழுந்தான் காணி 13 பரப்பு விற்பனைக்குண்டு. விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்:- கா. ஆறுமுகம், இணுவில் மேற்கு, சுன்னகம். 1335

### காணவில்லை

M 769053, 769054, 769055, 769056, 766057, C 185216, 185217, 185218, I 112995, 112996, 160929 இலக்க கூப்பன்கள் பெரியகடையில் தவறிவிட்டன. கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்கு சன்மானம் அளிக்கப்படும். எஸ். குப்புசாமி, சி. எஸ். கே. மில் கணக்கப்பிள்ளை, யாழ்ப்பாணம். 1347

## வானெலி
### கொழும்பு

### சனி 6-11-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரைப்பட இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செய்திச்சுருள் 7-00 இசைக்கச்சேரி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 கலை ஏடு. 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு 7-11-65

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீட்டர்&61 மீட்டர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-00 குரல்வகை, 7-45 தமிழோடிசைபாடல், 8-00பக்திப்பாடல்கள், 8-15 ஞானமிர்தம்.

344 மீட்டர்&49 மீட்டர்

8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் பாடசாலை, 9-30 திரை இசை. 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 மத்தாப்பு.

344 மீட்டர்&61 மீட்டர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-10வாத்தியஇசை 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 நேயர் கடிதங்கள் 7-00 பாட்டு, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-15 மனைவிளக்கு—மாதர் நிகழ்ச்சி, 9-45 மாதர் கேட்டவை, 10-15 தேர்ந்த இசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூறாவளியால் பாதிக்கப்பட்ட

# மீனவர்களுக்கு டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம் உதவி

மாவிட்டபுரம், வியாழன் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு வழங்குமுகமாக டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுப்பியிருந்த 126 மீன்பிடி வலைகளில் 76 வலைகள் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டன.

காங்கேசன்துறை வாடிவீட்டில் வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை முன்னிலையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கச் சார்பில் திரு. ஜே. டி. எஸ். ரணவீரா தம்பதிகள் பலாலி மீனவருக்கு பத்து வலைகளும் மயிலிட்டி மீனவர்களுக்கு 20 வலைகளும் தெல்லிப்பழை வடமேற்கு மீனவர்களுக்கு ஐந்து வலைகளும் வழங்கினர். ஊர்காவற்றுறை மீனவர்களுக்கு நாளை பத்து வலைகள் வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவிலுள்ள மீனவர்களுக்குபத்து வலைகளும், பருத்தித்துறை காரியாதிகாரி பிரிவிலுள்ள மீனவர்களுக்கு பதினொரு வலைகளும், பளை காரியாதிகாரி பிரிவிலுள்ள மீனவர்களுக்கு பத்து வலைகளும்வழங்கப்பட்டன.

இந்த வலை ஒவ்வொன்றும் 232 ரூபாய் 34 சதம் பெறுமதியானவையாகும்.

# இலங்கை - பிரிட்டன் கடனுதவி ஒப்பந்தம்

கொழும்பு, வியா. இலங்கைக்கு பிரிட்டன் இரண்டு கோடியே அறுபத்தியாறு லட்சம் ரூபா பெறுமதி பொருளாதார உதவியளிக்கக்கூடிய ஒப்பந்தமொன்று இன்று இங்குகைச்சாத்தானது.

இதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை சார்பில் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும் பிரிட்டன் சார்பில், இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு. மைக்கல் வோர்க்கரும் கையெழுத்திட்டனர்.

பிரிட்டன் மொத்தமாக அளிக்கும் நான்குகோடியே எழுபத்தியாறு லட்சம் ரூபா பொருளாதார உதவியில் இது முதற்தடவை உதவியாகும். இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியைப்பெருக்குவதற்காகவே பிரிட்டன் இவ்வுதவியை அளிக்கிறது. உரம், விவசாயத்துக்கான இரசாயனங்கள் கைத்தொழில் தளபாடங்கள், உபகரணங்கள், இயந்திர சாதனங்களை பிரிட்டன் வழங்கும்.

வடமாகாண பாடசாலைகள் உதைபந்தாட்டப் போட்டி

# பரமேஸ்வராவின் சிறப்பான விளையாட்டு

## இருந்தாலும் வெற்றி யூனியனுக்கே!

பரமேஸ்வராக் கல்லூரிக்கோஷ்டி வீரர்களுடைய எடுப்பும். தொடுப்பும், வெகு அபாரமாக இருந்தும் முடிப்பில் 'துடிப்பு' இல்லாததால் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி கோஷ்டியிடம் தோற்றுவிடவேண்டிய துரதிர்ஷ்ட நிலை நேற்றுமாலை யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற ருசிகரமான உதைபந்தாட்ட போட்டியில் ஏற்பட்டது.

உதைபந்தாட்ட 'சீசன்' தொடங்கிய தற்குப்பிறகு யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டிகளில் ரசிகர்களைத் தன்பக்கம் இழுக்கக் கூடியவிதத்தில் நேற்றையபோட்டி அமைந்திருந்ததென்றே சொல்லலாம். இதற்காக இவர்களை விசேஷமாகப் பாராட்டவேண்டும்.

பரமேஸ்வராக் கோஷ்டி முன்னணி வீரர்கள் எதிர்க் கோஷ்டியிடமிருந்து பந்தைப் 'பறித்து' கட கட வென்று பந்தைக்கொண்டு போனதே தனி 'பியூட்டி'! பரமேஸ்வரா வலது முன்னணி வீரர் மாசிலாமணி தன்னிடம் பந்தைப் பறிக்க வரும் வீரர்களை ஏயாற்றி அழகாக யூனியன் கோலுக்குக்கிட்டே பந்தைக்கொண்டுபோயும், இறுதியில் உள்ளேசெலுத்தமுடியாமல் 'கோட்டை' விட்டு விடுவது ரசிகர்களுக்கு பெரிதும் ஏமாற்றத்தைக் கொடுப்பதாக அமைந்திருந்தது.

யூனியன் கோஷ்டி முன்னணி வீரர் இடைவேளைக்கு முன்னர் ஒரு ந்தை முதலாவதாக பரமேஸ்வராக் கோலுக்குள் இறக்கினார். இதற்குப் பிறகு பரமேஸ்வராவுக்கு ஒரு 'பனல்டி' கிடைத்தது. ஆனால் இதனை அடித்த பரமேஸ்வராக் காப்டன் செல்வந்திரன் கோலுக்குள் அடிக்காமல் வெளியே அடித்து தம்பக்கத்துக்குக்கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிடுகிறார். ஆனாலும் 'காப்டன்' செல்வச்சந்திர யூனியன் கோலுக்குள் ஒரு கோலைத் தள்ளினார். இதற்குப் பிறகு யூனியன் கோஷ்டி பரமேஸ்வராக் கோலுக்குள் ஒரு கோலைத்தள்ளியது.

பரமேஸ்வராக் கோஷ்டியை 2—1 கோல்களால் யூனியன் கோஷ்டி தோற்கடித்தது.

### நடேஸ்வரா வெற்றி!

காங்கேசன்துறை நடேஸ்வராக் கோஷ்டிக்கும், கரவெட்டி விக்னேஸ்வராக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற 'பி' பிரிவுக்கான போட்டியில் நடேஸ்வராக் கோஷ்டி 4—2 கோல்களால் விக்னேஸ்வராக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

-'ஆல்ரவுண்டர்'

## யாழ். மாநகரசபை ஆணையாளர் மாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் திரு ஏ. எச். ஏ. சமி காலி மாநகரசபைக்கு டிசம்பர் 9-ந் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தற்பொழுது யாழ். மாநகரசபையில் கணக்காளராக கடமையாற்றும் திரு. ஹட்சன் செல்வராசா மாநகரசபை ஆணையாளராக கடமையாற்றுவார்.

## மாநகரசபை கமிஷனர் இடமாற்றம்

காலி, வியாழன் காலி மாநகரசபை கமிஷனர் திரு. கே. சண்முகம் உடனடியான உத்தரவின் பேரில் நீர்கொழும்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

உள்நாட்டு அமைச்சரும் காலி எம். பி.யுமான திரு. டபிள்யு தகநாயக்கா, உடனடியாக திரு. சண்முகத்தை இடமாற்றம் செய்யும்படி ஸ்தலஸ்தாபன சேவைக்கமிஷன் தலைவருக்கு தந்தி அனுப்பியிருந்தார் என அறியப்படுகிறது.

கமிஷனர் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைப்பதாகவும், சர்வாதிகார முறையில் நடந்து கொள்வதாகவும் அத்தந்தியில் கூறப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஸ்தலஸ்தாபனக் கமிஷனர் அனுப்பியுள்ள தந்தியில் விளக்கம் தருமாறு திரு. சண்முகம் கோரப்பட்டுள்ளாரென்றும் மந்திரியினால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை திரு. சண்முகம் மறுத்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

## அபராதத்தை எதிர்த்து அப்பீல்

யாழ்ப்பாணம். வெள்ளி சயிக்கிள் ரீயூப் விற்கமறுத்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு அரசாங்க அதிபரால் 5000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்ட என், சாம்பசிவம், தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள என். சாம்பசிவம் அன் சன்ஸ் உரிமையாளரான என். சாம்பசிவம், அவரது வழக்கறிஞரான புறக்டர் ஏ. அமிர்தலிங்கம் மூலம் அப்பீல் விண்ணப்பத்தை அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்துள்ளார்.

அப்பீலில் சயிக்கிள் ரீயூப் விற்கமறுத்த குற்றச்சாட்டைமறுத்துள்ளதாக அறியப்படுகிறது.

வர்த்தக தகராறு அப்பீல் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணை செய்யப்படும்.

## தமிழரசுக்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

போட்டியிட்டு அமோக வெற்றிபெற்றார். 1965-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் நல்லூர்த் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

செனட்டராகஇருந்த நாகநாதன் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக செனட்டர் பதவியிலிருந்து விலகினார். தமிழரசுக்கட்சியின் பொதுக் காரியதரிசியாகவும் கடமையாற்றியுள்ளார். டாக்டர் நாகநாதன் தமிழ் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டு தடுப்புக்காவலில் இருந்திருக்கிறார்.

தலைவர் தெரிவு பற்றித் தமிழரசுக் கட்சிம் பொதுச் செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

கட்சியின் அமைப்பு விதிகளின், விதி 9 (ஊ) பிரிவின்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த மகாநாடு முதல் கட்சியின் தலைவர் பதவிக்கு டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனின் பெயர் மாத்திரமே பிரேரிக்கப்பட்டிருக்கும் காரணத்தினாலும், வேறு நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்குரிய காலம் கடந்துவிட்டபடியாலும், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் அடுத்த மகாநாடு முதல் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்படவிருக்கிறார்.

## அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், சனி கோப்பாய் ரஸிக கலா மன்ற ஆதரவின்கீழ் செல்வி எஸ்தர்தனதேவி சுப்பையாவின் வயலின் இசை அரங்கேற்றம் இன்று மாலை 6 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இடம்பெறும்.

செல்வி எஸ்தர் தனதேவி சென்னை சர்வகலாசாலை சங்கீத வித்துவான் முதல் பிரிவில் - அடையார் கர்நாடக சங்கீத மத்திய கல்லூரியில் சித்தியெய்தி தங்கப் பதக்கம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வலி-வடக்கு காரியாதிகாரி திரு. தி. முருகேசபிள்ளையின் தலைமையில் நடைபெறும் இவ்வரங்கேற்றத்தில் பலர் ஆசியுரை வழங்குவார்கள்.

## இளவரசி யு. எஸ். புறப்பாடு

லண்டன், நவ. 4 மார்கரட் இளவரசியும், அவரது கணவரும் அமெரிக்க சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்ளும்பொருட்டு புறப்பட்டிருக்கிறார்கள்.

## இ. போ. ச. வுக்கு அதிக வருமானம்

கொழும்பு, வியா. இலங்கை போக்குவரத்து சபை கடந்த ஒனபது மாதங்களில், எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க கூடுதலான வருமானம் பெற்றுள்ளது.

இவ்வருடம் செப்டம்பர் மாதம் எதிர்பார்த்ததிலும் பார்க்க கூடுதலாக 195,874 ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

## சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

100 பரிசுகள்.

| | |
|---|---|
| 01 U 0405 | 19 F 0837 |
| 03 M 0546 | 06 W 0968 |
| 03 Z 0943 | 08 P 0145 |
| 18 Y 0595 | 24 U 0757 |
| 08 T 0901 | 07 B 0808 |
| 20 P 0887 | 01 S 0188 |
| 11 X 0852 | 17 O 0157 |
| 14 U 0896 | 23 V 0728 |
| 19 S 0143 | 21 A 0578 |
| 19 Y 0690 | 11 L 0721 |
| 15 Y 0809 | 19 M 0084 |
| 14 J 0189 | 17 D 0827 |
| 04 Q 0221 | 12 Z 0524 |
| 01 U 0318 | 19 B 0392 |
| 15 G 0811 | 10 Y 0894 |
| 10 V 0221 | 02 Z 0879 |
| 14 U 0595 | 14 L 0926 |
| 16 J 0214 | 11 C 0717 |
| 10 J 0829 | 24 D 0301 |
| 16 E 0341 | 22 G 0208 |
| 05 H 0827 | 22 D 0232 |
| 23 M 0189 | 07 V 0078 |
| 18 G 0057 | 14 M 0412 |
| 22 V 0482 | 13 S 0575 |
| 18 V 0120 | 20 V 0073 |
| 17 Z 0208 | 13 M 0337 |
| 07 Z 0931 | 18 Q 0928 |
| 12 W 0389 | 07 D 0345 |
| 19 X 0266 | 18 B 0372 |
| 20 M 0133 | 17 L 0051 |
| 12 S 0823 | 15 P 0964 |
| 23 N 0335 | 06 M 0363 |
| 10 E 0334 | 23 Z 0478 |
| 17 Q 0978 | 08 M 0993 |
| 15 L 0292 | 22 P 0709 |
| 10 O 0187 | 12 X 0301 |
| 05 O 0030 | 07 E 0698 |
| 11 K 0006 | 24 Z 0165 |
| 05 V 0538 | 12 B 0355 |
| 20 B 0014 | 23 Y 0918 |
| 02 B 0586 | 21 C 0663 |
| 01 J 0461 | 07 R 0284 |
| 18 F 0012 | 15 E 0705 |
| 02 P 0464 | 05 J 0385 |
| 02 Y 0806 | 24 A 0899 |
| 13 U 0157 | 15 T 0086 |
| 15 W 0424 | 01 L 0945 |
| 03 U 0937 | 24 N 0174 |
| 23 B 0848 | 04 M 0616 |
| 15 L 0923 | 11 G 0700 |

# ஜயாறன்

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

ச. வைப் பாராட்ட வேண்டும். ஆனால் வருமானத்தில் குறியாக இருக்கும் அதே சமயத்தில், பிரயாணிகளான பொதுமக்களுக்குக் கூடுமான வசதியையும் அவர்கள் ஏற்படுத்த வேண்டும்.

பொதுமக்கள் பஸ்ஸைத் தான் இக்காலத்தில் பெரிதும் நம்பி இருக்கிறார்கள். இரண்டடுக்கு பஸ்ஸுகள் அதிகம் விடப்படுவது நல்லதே. என்றாலும் மழை காலத்திலே ஜனங்கள் மழையில் நனைந்துகொண்டே பஸ்ஸுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது ஸ்டாண்டுகளில் ஆங்காங்கே மழைக்காகப் போதிய பாதுகாப்பை ஏன் செய்யாமலுள்ளனர்? சில இடங்களில் பெயரளவில் சிலபாதுகாப்புகள் உள்ளன. ஆனால் அவை பார்ப்பதற்கும் அவலட்சணமாக இருப்பதுடன் ஒழுகவும் செய்கின்றன. சில இடங்களில் சில புண்ணியவான்களின் பெயரில் இப்பாதுகாப்புகள் இருக்கின்றன. இ. போ. ச.வும் நகரசபைகளும் பொதுமக்களின் நன்மைக்கான இந்த ஏற்பாட்டை அவசியம் செய்ய வேண்டும்.

ஃ ஃ ஃ

அரை மணி நேரத்துக்கு மேல் காத்திருந்து ஒரு பஸ்ஸில் ஒருவிதமாக ஏறினேன். பஸ்ஸுக்குள் ஆங்கிலத்தில் ஒரு விளம்பரம் கண்டேன். "தேவை 22 பெண்கள். நேரில் வந்து பார்க்கவும்" என்ற அந்த விளம்பரம் கூறியது. பார்க்கவேண்டிய முகவரியும் அதில்இருந்தது. அது லண்டனிலுள்ள ஒரு விலாசம்! இரண்டடுக்கு பஸ்ஸுகள் லண்டன் நகரிலே பத்து வருடங்கள் ஓடியபின், இலங்கைமுதலிய நாடுகளுக்கு அதை பழைய விலைக்கு விற்றுவிடுகின்றனர். அப்படி வாங்கிய பஸ்ஸுகளில், விளம்பரங்களை அழிக்க நேரமில்லைப் போலும்! விளம்பரங்களுடன் அப்படியே இலங்கையில் ஓடுகின்றன. லண்டன் விளம்பரங்களெல்லாம் இலங்கையிலே இலவசமாக செய்யப்படுகின்றன? இதுவும் ஒருவிதத்தில் நல்லது தான். லண்டன் சூழ்நிலை, எப்படி இருக்கிறதென்பதை இங்கு நாம் தெரிந்து கொள்ளவும், லண்டன் நகர பிரயாணிகள் பார்க்கும் விளம்பரங்களை நாமும் பார்க்கவும் இது வாய்ப்பளிக்கின்றதல்லவா?

ஃ ஃ ஃ

இயல்பாய ஈசனை எந்தை
தந்தை என் சிந்தை மேவி
யுறைகின்றானை, முயல்வானை
மூர்த்தியைத் தீர்த்தமான
தியம்பகன் திரிசூலத்தன்ன
கையன், கயல்பாயுங் கண்
டல் சூழ்வுண்டவேலிக் கழிப்
பாலை மேய கபாலப்பனார்,
மயலாய மாயக்குரம்பை
நீங்க வழிவைத்தார்க் கவ்
வழியே போதும் நாமே.

— அப்பர்சுவாமிகள்.

வால்வெள்ளி

## இங்கும் காணப்பட்டது

மன்னார், வெள்ளி இலங்கையின் பல பாகங்களிலும் கடந்த வாரக்கடைசியில் காணப்பட்ட வால் நட்சத்திரம் மன்னார் கிழக்கு திசை ஓரமாக மன்னார் பகுதியிலும் காணப்பட்டது. "டோர்ச் லைற்" சுடரைப் போன்று அதிகாலை 4 மணியளவில் இது தெரிகிறது.

இந்த வால் நட்சத்திரம் 1905-ம் ஆண்டு ஒருமுறை தோன்றியதாகஅறியப்படுகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org